**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121/2015**

**வழக்கு சாட்சி: PW.11**

**தேதி: 16.02.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **வைரவசுந்தரம்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **வேலுச்சாமி** | **தொழில்:** | **மருத்துவர்** |
| **கிராமம்:** | **தேவகோட்டை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **தேவகோட்டை** | **வயது:** | **44/2024** |

எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் மூப்பு உதவி மருத்துவ அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 31.07.2012 அன்று சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை மருத்துவ அலுவலராக இருந்த தினம் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கு உட்பட்ட உதவி காவல் ஆய்வாளர் கையொப்பமிட்ட கிரேடு 1, எண் 1689 கண்ணன் என்பவரின் மேற்பார்வையில் குற்ற எண் 297/2012 பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 302 இதச வின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் இறந்து போன 45 வயது கொண்ட முத்துராமு என்பவரின் பிரேதம் பரிசோதனைக்காக அன்று மாலை 04.20 மணிக்கு கொண்டு வரப்பட்டது. எனது தலைமையிலான மருத்துவக் குழு அதே தினம் மாலை 04.50 மணியளவில் உடற் கூறாய்வு செய்தது. அந்த பெண் பிரேதம் மல்லாந்த நிலையில் வைக்கப்பட்டிருந்து. இரண்டு கைகளும், கால்களும் விரைத்த நிலையில் இருந்தது. வாய் மற்றும் கண்கள் மூடிய நிலையில் இருந்தது. காதுகள் இரண்டும் இயல்பான நிலையில் இருந்தன. கூர்மையான ஆயுதங்கள் கொண்டு தாக்கப்பட்ட இரண்டு காயங்கள் அவரது இடது நெஞ்சின் பக்கவாட்டின் பகுதியில் இருந்தது. முதல் காயம் 6வது நெஞ்சு எலும்பு மற்றும் 7வது நெஞ்சு எலும்பிற்கு இடையில் 5 செ.மீ நீளமும் 2.5 செ.மீ அகலமும், 2.5 இன்ச் ஆழமும் கொண்ட காயம் இருந்தது. மற்றொரு காயம் முதல் காயத்திலிருந்து 10 செ.மீ கிழே வயிற்றின் பக்கவாட்டு பகுதியல் 1 செ.மீ நீளமும் 1 செ.மீ அகலமும் கொண்டிருந்தது. அந்த பிரேதத்தை உடற்கூறாய்வு செய்த போது நெஞ்சு எலும்புகள் இயல்பான நிலையில் இருந்தன. இடது பக்க நுரையீரல் முழுவதும் இரத்தம்

உறையாமல் இருந்தது. வலது பக்க நுரையீரல் இயல்பான நிலையில் இருந்தது. இருதயம் வெளிறிய நிலையில் இருந்தது. இருதயம் முழுவதும் இரத்தமின்றி காலியாக இருந்தது. அவரது குரல் வளை எலும்பு இயல்பான நிலையில் இருந்தது. அவரது வயிற்று பகுதியில் இரத்தம் உறையாமல் தேங்கியிருந்தது. அவரது மண்ணீரலில் குத்து காயம் இருந்தது. மற்ற உறுப்புகளான கல்லீரல், சிறுநீரகம், வயிறு மற்றும் இரைப்பை சிறுகுடல் பகுதிகள் வெளிறிய நிலையில் இருந்தன. சிறுநீர் பையில் சிறுநீர் இயல்பான நிலையில் இருந்தது. அவரது தலை எலும்புகள் இயல்பான நிலையிலும் மூளை இயல்பான நிலையிலும் இருந்தது. அவருடைய உள்ளுறுப்புகளை பரிசோதனைக்கு அனுப்பி உள்ளுறுப்புகளில் விஷம் அருந்தியதற்கான அறிவுரைகள் எதுவும் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டது. அந்த தடயவியல் அறிவியல் அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே அவரின் மரணம் அவரின் உள்ளுறுப்புகளான நுரையீரல் மற்றும் மண்ணீரலில் ஏற்பட்ட தீவிர குத்து காயங்களினாலும் அதன் மூலம் அதிகமான இரத்த இழப்பு ஏற்பட்டு மரணம் ஏற்பட்டது என்று நான் பிரேத பரிசோதனை சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று **அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1 போன்ற ஆயுதத்தால் இறந்து போனவருக்கு காயங்கள் ஏற்பட வாய்புள்ளதா என்றால் வாய்புள்ளது. நான் பிரேத பரிசோதனை செய்த நேரத்தில் இருந்து 5லிருந்து 6 மணிநேரத்திற்குள்ளாக முத்துராமு என்ற பெண்ணிற்கு மரணம் ஏற்பட்டிருக்க வாய்புள்ளது. இது சம்பந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

ஆண்டிரியர் ஆக்ஸிலரி லைன் என்பது அக்குலில் இருந்து நெஞ்சு பகுதி செல்லும் பகுதியில் உள்ளது என்றால் சரிதான். ஆக்ஸிலரி லைன் என்பது நடுவில் உள்ளது. அதில் ஆண்டிரியர் என்றால் உடலின் முன்புறமும் போஸ்டிரியர் என்றால் உடலின் பின்புறமும் உள்ளது என்றால் சரிதான். நெஞ்சு எலும்பில் 6 மற்றும் 7 க்கு இடைப்பட்ட பகுதி என்பது மார்பு எலும்பின் 6, 7 எலும்பு பகுதியை பிரிக்கிறது என்றால் சரிதான். அதில் ஆண்டிரியர் என்று குறிக்கப்பட்டது குத்து காயம் உடலின் முன் பகுதியில் ஏற்பட்டதாக அர்த்தம் என்றால் சரிதான். 2வது குத்து காயம் முதல் குத்து காயத்தின் நேர்கோட்டில் 10 செ.மீ இடைவெளியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். 2வது குத்து காயத்தின் ஆழத்தை நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காவல் துறையினர் ஆயுதம் எதையும்

காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இருமுனை கூர்மையான ஆயுதத்தால் காயங்கள் ஏற்பட்டதா என எனது அறிக்கையில் குறிக்கவில்லை என்றால் சரிதான். நுரையீரலில் காயம் இருந்ததாக எனது அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் வெளிக்காயத்தின் தொடர்ச்சி இடது புற நுரையீரலின் கீழ் பகுதியில் காணப்பட்டது என்றால் சரிதான். அதே போல் 2வது காயத்தின் தொடர்ச்சி மண்ணீரலில் ஏற்பட்டுள்ளது என எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மண்ணீரலின் இருப்பிடம் ஒவ்வொரு மனிதனின் உடல் வாகை பொறுத்து அமையும் என்றால் சரிதான். பட்டாக் கத்தியும், ஈட்டியும் கூர்மையான ஆயுதங்கள் என்றால் சரிதான். எந்த கூர்மையான ஆயுதங்களின் மீதும் விசையுடன் விழுந்தால் இந்த காயங்கள் ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான். எனக்கு கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்துடன் வழக்கின் சரித்திரம் இணைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த வேண்டுகோள் கடிதத்தை நான் இன்று குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கின் சரித்திரத்தை பார்த்தால் சம்பவத்தை பற்றிய குறிப்புகள் இருக்கும் என்றால் சரிதான். எனது மருத்துவக் குழுவில் உதவியாளர்கள் தவிர மருத்துவர் நான் ஒருவர் மட்டும் தான் இருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் மரணம் பிரேத பரிசோதனைக்கு எத்தனை மணிநேரத்திற்கு முன்பாக நிகழ்ந்திருக்கும் என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். நான் பார்த்த உள் காயங்கள் அனைத்தும் வெளிக்காயங்களின் தொடர்ச்சி என்றால் சரிதான்.